**ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை - 2022**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு காணப்பட்ட 11 வழக்குகள் தொடர்பான நிதிக் கூறுகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை | எதிர்காலத்தில் காண்பிக்க நடவடிக்கை எடுப்பதாக | நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும் |

#### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் ஏலவிற்பனை செய்யப்பட்டிருந்த ரூபா 138,260 பெறுமதியான 02 மோட்டார் சைக்கில்கள் மோட்டார் வாகனங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் உடன்படிக்கையொன்றோ அல்லது ஏனைய குத்தகைக்கு வழங்குதல் என அல்லாமல் வேறொரு கடப்பாடு | உள்ளூராட்சி மன்ற திணைக்களத்தினால் இச்செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் | முடிவடைந்த வேலைகளின் பெறுமதி மாத்திரம் கணக்கீடு செய்யப்பட |

| | | | |
|---|---|---|---|
| | ஒன்றில்லாமல் நூலக தானியங்கி முறைமையொன்றை நிறுறுவதற்கும் 03 அபிவிருத்தி செயற்பாடுகளின் மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 27,069,400 கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு தாமதமடைந்துள்ளதாக. | வேண்டும். |
| (இ) | மெதவல வியாபார தொகுதியின் புதிய கடைகளைப் பெற்றுக் கொண்ட ரூபா 540,000 ஓரே தடவை தொகை பொது வைப்புக்களின் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | மீளச் செலுத்தப்படாத வைப்பொன்றாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாக. | வருமானம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 03 கணக்கு மீதிகளுக்குரிய அட்டவணைகளில் காணப்படும் மீதிகளுக்க இடையே ரூபா 848,400 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | எதிர்வரும் ஆண்டுகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கு மீதிகள் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1952 இன் 06 ஆம் இலக்க உள்ளுராட்சி மன்ற (நியம உப உறுப்புரை) சட்டம் | | | |
| (i) விளம்பர அறிவித்தல் தொடர்பான உப உறுப்புரை | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய ரூபா 29,260 ஆன விளம்பர பதாதை கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் அறவிட வேண்டும். |
| (ii) முச்சக்கர வண்டி தொடர்பான உப உறுப்புரை | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய ரூபா 1,975,050 ஆன முச்சக்கர வண்டிக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | முச்சக்கர வண்டி சங்கங்களை இனங்கண்டு வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் அறவிட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 44,230,158 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 41,689,826 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 10,139,600 | 10,139,592 | 8,046,701 | 14,893,190 | 10,139,600 | 9,708,540 | 7,800,300 | 12,800,300 |
| (ii) | வாடகை | 1,207,800 | 1,138,400 | 1,373,675 | 39,950 | 1,207,000 | 970,300 | 920,575 | 275,225 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,904,050 | 2,141,050 | 2,141,050 | - | 1,000,000 | 1,019,500 | 1,019,500 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 38,856,500 | 48,489,972 | 4,674,195 | 38,656,601 | 49,763,301 | 49,970,282 | 91,120 | (5,159,176) |
| | | 52,107,950 | 61,909,014 | 16,235,621 | 53,589,741 | 62,109,901 | 61,668,622 | 9,831,495 | 7,916,349 |

#### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதவரி** | | |
| (i) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி ரூபா 14,893,190 ஆக காணப்பட்டதுடன் அலகொன்றில் வீதவரி நிலுவை ரூபா 5,000 இற்கு மேற்பட்ட 666 ஆதனங்களில் மொத்தம் ரூபா 5,860,087 ஆன வீதவரி நிலுவையொன்று காணப்பட்டது. | பிடி விராந்து பிறப்பிக்கப்பட்டு ஆதனங்களை தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 1946 இன் 30 ஆம் இலக்க வீதவரி மற்றும் மதிப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் பிரகாரம் 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை வீதவரி திருத்தமொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட வீதவரி மதிப்பீட்டின் பிரகாரம் வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | முறையாக ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |

(ஆ) அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொள்ள வேண்டிய 18 நிறுவனங்கள் மீளாய்வாண்டிற்காக அனுமதிப் பத்திரங்களை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருந்ததுடன் அதற்காக பெறவேண்டிய ரூபா 72,000 ஆன கட்டணமொன்று அறவிடப்பட்டு இருக்கவில்லை | அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அறிவித்துள்ளதாக | குறித்த காலப்பகுதியில் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட வேண்டும். |

**2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,859,066 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 54,889,228 ஆக இருந்தது. | பிரதான செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களை பெற்றுக்கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) ஆயுர்வேத நிலையமொன்று, கலிவண்டி சேவையொன்று மற்றும் வாரச் சந்தையொன்று போன்ற பொது மக்கள் பயன்பாட்டு சேவையொன்றை செயற்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இச்செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொதுச் சேவைகளை நடாத்த வேண்டும். |
| (ஆ) நலன்புரி நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டின் பாதீட்டில் ரூபா 4,570,000 ஆன நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் அச்செயற்பாடுகளை நிறை வேற்றாமல் அந்நிதிஏற்பாடு வேறு செலவின தலைப்புகளுக்கு மாற்றப்பட்டிருந்தது. | அத்தியவசிய சேவைகளை தொடர்ச்சியாக பேணிச் செல்லப்பட வேண்டியுள்ளதால் நிதி ஏற்பாடுகளை மாற்ற நேர்ந்தது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். |
| (இ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தில் 78(1) ஆம் பிரிவின் பிரகாரம் பொது சுகாதார அதிகாரியாக சபை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதும் சபைக்கு சொந்தமான நீர் செயற்திட்டத்தில் நீரின் மாதிரிகள் பரீட்சிக்கப்படாமல் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | குறித்த தரப்பினர் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். | நீர் மாதிரி பரிசோதனைகளை மேற்கொண்டு சுத்தமான குடிநீர் வழங்கப்பட வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய 07 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,532,624 ஆக இருந்ததுடன் அதில் 01 ஆண்டுக்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்திற்குரிய மீதிகளின் மொத்தம் ரூபா 1,480,976 ஆகவும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் மொத்தம் ரூபா 849,786 ஆன மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய மீதிகள் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 02 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 98,048,620 ஆக இருந்ததுடன் அதில் 1 இற்கும் 5 ஆண்டு களுக்கும் இடைப்பட்ட காலப் பகுதிக்குரிய ரூபா 31,795,554 தொகை தீர்வு செய்யப்பட்டிருக்க வில்லை. | செயற்திட்டம் முடிவடையும் போது கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | செலுத்த வேண்டிய மீதிகள் தீர்வு செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2019 ஆம் ஆண்டில் நன்கொடையாக கிடைத்து பொருத்தப்பட்டிருந்த சூரிள சக்தி முறைமை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மோட்டார் வாகன மீதிகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த 02 உழவ இயந்திர டேலர்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உள்ளுராட்சி மன்ற ஆணையாளரின் அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 3.3 விளைவற்ற குறைப் பயன்பாட்டிலான ஆதனங்கள் , பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு மொத்தம் ரூபா 17,857,799 ஆன உழவு இயந்திர டேலர் இயந்திர உபகரணங்கள் மற்றும் நீர் பயணங்கள் இருப்பென்று 01 இற்கும் 24 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக விளைவற்றும் குறை பயன்பாட்டுடனும் காணப்பட்டன. | எதிர்காலத்தில் திருத்தங்களை மேற் கொண்டு பயன்படுத்து வதாக | சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும் |
| (ஆ) | மெதவல பஸ் நிறுத்துமிடம் மற்றும் வியாபாரத் தொகுதியில் அமைந்துள்ள 12 ஆம் இலக்க விழா மண்டபம் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டன | இச்சபையின் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | - மேற்படி - |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) ரத்மலே மற்றும் குருந்துகஹமட நூல் நிலையங்கள் அமைந்துள்ள காணியை சபைக்கு பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | குறித்த காணியை அளவிட்டு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரித்து கையேற்கப்பட வேண்டும். |
| (ஆ) நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் மெதவல விளையாட்டரங்கு அமைந்துள்ள காணியின் உரித்தினை கையேற்பதற்காக 09 ஆண்டு காலத்தினுள் கையேற்புக் கட்டணங்கள், நிர்வாக செலவினம், இழப்பீட்டுக் கொடுப்பனவு மற்றும் அளவீட்டு கட்டணங்களாக மொத்தம் ரூபா 1,564,617 தொகை நகர சபைக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் உரித்து கையேற்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

### 3.5 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 1988 பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) 177 விதியின் பிரகாரம் கேள்வி நடைமுறை பின்பற்றப்படாமல் ரூபா 9,000,000 ஆன மதிப்பீட்டு பெறுமதியில் நிர்மாணிக்கப்பட நூலக கட்டிடம் நிர்மாணம் முறையற்ற வகையில் 04 கட்டங்களின் கீழ் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்பந்த சங்கம் ஒன்றுக்கு நிர்மாணம் கையளிக்கப்பட்டு மீளாய்வாண்டில் ரூபா 9,000,000 செலவிடப்பட்டிருந்தது | பதிவு செய்த சங்கம் ஒன்று மூலம் செயற்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. | விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பிரதேச செயலாளரின் அங்கீகாரம் இன்றி தொடர்பாடல் வயர்களை வீதி ஒன்றில் இழுப்பதாக குறிப்பிட்டு சபைக்குரிய மயானத்திலிருந்து 32 தேக்கு மற்றும் பலா மரங்கள் வெட்டி அகற்றப்பட்டிருந்தன. | பொதுச் சபை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டது. | குறித்த அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

### 3.7 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **(அ) ஊழியர் வெற்றிடங்களும் மிகையும்** | | |
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியுடன் ஒப்பிடும் போது 14 பதவிகளில் 17 வெற்றிடங்களும் ஒரு பதவியில் 20 மிகைகளும் காணப்பட்டன. | ஆட்சேர்ப்பு இடைநிறுத்தப் பட்டுள்ளதாகவும் பிரதான செயலகத்தின் மூலம் பயிலுனர் உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் உரிய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ) ஊழியர் கடன்** | | |
| முன்னைய ஆண்டில் இட மாற்றம் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்தும் ஓய்வுபெற்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்தும் ரூபா 143,473 ஆன கடன் மீதியொன்று அறவிடப்பட்டிருக்க வில்லை. | விரைவில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டும் |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வான்டில் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 24 செலவின விடயங்களில் 30 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் பாதீட்டை ஆக்கபூர்வமான முகாமைத்துவ கருவியாக பயன்படுத்துவதாக. | நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங்காணப்பட்டு செயற்படுத்த வேண்டும். |

### 4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் நியதிகளின் பிரகாரம் சபையினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங் காணப்பட்டிருந்த போதும் அவற்றை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | ஓரளவேனும் அந் நோக்கங்களை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு செயற்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |